அங்கு பணிபுரியும் சுமைதூக்கும் பணியாளர்கள் மற்றும் வாகன ஓட்டுநர்களின் நலன் சார்ந்த பணிகளும் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(உ) பணியின்போது உயிரிழக்கும் வனத் தொழிலாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை உயர்வு, தமிழ்நாடு சூழல்சார் சுற்றுலாக் கொள்கை, 2017 உருவாக்குதல், பவானி ஆற்றில் இணைய வழி தொடர் நீர் தர கண்காணிப்பு நிலையம் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன வளம், வன உயிரின வளம் பெருக சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை சார்பாக கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்:

1. வன வளத்தையும், வன உயிரினங்களையும், பொதுமக்களையும் பாதுகாக்கும் மகத்தான பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ள வனப் பணியாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது வன உயிரினத் தாக்குதலால் உயிரிழக்கும் துயர நேர்வுகளிலும், வனக் குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளுடனான மோதல்களில் உயிரிழக்க நேரிடும் நேர்வுகளிலும், வீர தீர செயல் மற்றும் எதிர்பாராத அசம்பாவித சூழ்நிலை போன்ற நேர்வுகளிலும், காவலர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வருகின்ற இழப்பீட்டுத் தொகைக்கு இணையாக வனப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் இழப்பீட்டுத் தொகையை 4 இலட்சம் ரூபாயிலிருந்து 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. 2013 முதல் 2015 வரையிலான காலத்திய இந்திய வன அளவை நிறுவனத்தின் வன அறிக்கையின்படி நாட்டிலுள்ள மற்ற மாநிலங்களைக் காட்டிலும், வனம் மற்றும் மரங்கள் அடர்ந்த பரப்பளவு தமிழகத்தில் மிக அதிக அளவில் அதிகரித்துள்ளது. தமிழகத்தினுடைய வன வளத்தை மேலும் பாதுகாக்கவும், அவ்வுணர்வினை அனைவரிடமும் வளர்க்கவும், வனப் பகுதியில் வாழ்ந்து வருகின்ற மலைவாழ் மக்களுடைய இயற்கை சார்ந்த

2017 ஜூன் 19] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

வாழ்க்கை முறையினைத் தற்கால சந்ததியினருக்கு, குறிப்பாக, மாணாக்கர்களுக்குக் கொண்டு சேர்க்கும் வகையிலும், உள்ளூர் மக்களை இயற்கைச் சுற்றுலா திட்டத்தில் முழுமையாக பங்கேற்கச் செய்து அவர்களது வேலைவாய்ப்பைப் பெருக்குவதுடன், சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகை செய்யும் வகையிலும் தமிழ்நாடு சூழல்சார் சுற்றுலாக் கொள்கை, 2017 உருவாக்கப்படும் என்பதை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. பவானி ஆறு, நீலகிரி மலையில் உற்பத்தியாகி காவேரி ஆற்றில் கலக்கின்றது. இந்த ஆற்றின் நீர் 90 சதவிகிதம் கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களின் பாசனத்திற்குப் பயன்படுகின்றது. மேலும், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் பவானி ஆறு விளங்குகிறது. பவானி ஆற்றின் கரையோரப் பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் வடிகால் கழிவுநீர் வெளியேற்றத்தால் ஆற்று நீரில் ஏற்படும் தாக்கத்தைக் கண்காணிக்கும்வண்ணம் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தற்போது மாதம் ஒருமுறை நீர் மாதிரி எடுத்து ஆய்வு செய்கின்றது. ஆற்று நீரின் தன்மையைத் தொடர்ச்சியாக 24 மணி நேரமும் கண்காணிக்கும் நோக்கத்துடன் நடப்பு நிதியாண்டில் பவானி ஆற்றில் 2 இடங்களில் இணைய வழி தொடர் நீர் தர கண்காணிப்பு நிலையங்கள் ஒரு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். இந்நிலையங்கள் தலைமை அலுவலகம் மற்றும் உரிய மாவட்ட அலுவலகங்களுடன் இணைய வழியாக இணைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

6. பள்ளிக் கல்வி, உயர் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் வனம் ஆகிய துறைகள் தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110–ன்கீழ் இன்று பல்வேறு அறிவிப்புகளை அறிவித்துள்ளார்கள். இந்த